கவன ஈர்ப்புகள்

(திரு. சு. பாலன்)

நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி அம்பேத்கார் நகர் பகுதியை அந்த டான் பாஸ்கோ ஸ்தாபனம் தத்து எடுத்துக் கொண்டு அங்குள்ள குடிசைகளை அகற்றி அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பதாகவும், அதற்காக அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதாகவும், பல இலட்சக்கணக்கான ரூபாயை குடிசை மாற்று வாரியத்திற்கு நன்கொடையாகக் கொடுத்து இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறதே, இது உண்மையா அப்படியானால் எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்பதோடு, அறிக்கையிலே சொன்னது போன்று, இந்த சமுதாயப் பணிகளுக்காக வரையறுக்கப்பட்ட திறந்தவெளி மனைகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து காக்கும் பொருட்டு, தாட்கோ மூலமாக, அரசாங்கத்தின் மூலமாகக் கட்டுவதாகச் சொல்கிறார்கள். அப்படி அவர்கள் கட்டுவதாக இருந்தால், ஏற்கனவே மதிற் சுவர்கள் கட்டுவதற்கு முன்னாலேயே அனுமதி பெற்று கட்டுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: அவர்கள் கட்டுகின்ற கட்டிடங்களைப் பொறுத்த வரையில் அனுமதி பெற்று கட்டியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காம்பௌண்ட் சுவர் கட்டியிருந்தால், உள்ளேயிருக்கின்ற இடத்தில் சிலர் கட்டிடங்களைக் கட்டியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி ஏதாவது அனுமதி இல்லாமல் கட்டியிருந்தால் அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சுற்றுச் சுவர்கள் பொறுத்த வரையில், ஏற்கனவே இரண்டு முறை அந்த இடத்திலே மற்ற நபர்கள் ஆக்கிரமிப்பு செய்ததன் காரணமாக குடிசை மாற்று வாரியம் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் அன்றும், 1983 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 6 ஆம் நாள் அன்றும் அங்கே இருந்தவர்களை அகற்றியுள்ளது. அந்த இடத்தினுடைய நிலத்தைப் பாதுகாக்கின்ற தன்மையில் தான் இந்தச் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இறுதியாக மாண்புமிகு உறுப்பினர் கட்டப்பட்ட வீடுகளுக்கு அந்த நிறுவனம் கொடுத்த நிதியைப் பற்றி கேட்டார்கள். 90 வீடுகளைக் கட்ட இந்த சேவைச் சங்கம், ஒரு குடியிருப்பிற்கு ரூ. 6,000 வீதம் மானியம் வழங்கியிருக்கிறது.

(38) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். சிவராமன், சு. சிவராஜ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

கவன ஈர்ப்புகள்

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 'கள்ளக் குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்புசாகுபடி செய்யும் விவசாயிகளின் கரும்பு பதிவு செய்யப்பட மாட்டாது என்று கூறப்படுவதால், கள்ளக்குறிச்சி, சங்கரபுரம் விஸ்வந்திபுரம் ஆகிய ஒன்றிய பகுதிகளைச் சார்ந்த விவசாயி களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்த' அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில்துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை இன்னும் அந்தத் துறையிடமிருந்து கிடைக்கவில்லை. விவர அறிக்கை வந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த அரசி னுடைய பதிலை அளிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

(39) நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்டுவரும் நட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. உச்சி, கே. கல்லன, ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ''நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு தேயி லைத் தொழிற்சாலைகளும் நட்டத்தில் இயங்கி வருவது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆனூர் ப. கோ. ஜெகதீசன் : தலைவர் அவர் களே, பேரவை முன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

நீலகிரி மாவட்டத்திலுள்ள தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் 2 ஏக்கர் முதல் 25 ஏக்கர் வரை சிறு தேயிலை தோட்டங்களை உடைய சுமார் 8,887 சிறு தேயிலை உற்பத்தி யாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளன. இத்தகைய தோட்டங்களிலிருந்து கொண்டு வரப்படும் பச்சை தேயிலைகள் அனைத்தும் ஒரே தரமானதாக இருக்க வாய்ப்பில்லை. எனவே பல்வேறு தரமான பச்சை தேயிலையைக் கொண்டு தயாரிக்கப் படும் தேயிலைத் தூள் முதல் தரமானதாக இருக்காது. ஆனால் டான்டீ மற்றும் தனியார் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்